Physics Class
Viyaparimoolai
Pointpedro
G C E. (A/T) 1988
ஆரம்பம் 20-7-86
காலை 6 மணி
VARNAM
B.Sc. (Hons)

Registered as a Newspaper

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

Physics Class
Viyaparimoolai
Pointpedro
G C E. (A/L) 1988
ஆரம்பம், 20-7-86
காலை 6 மணி
VARNAM
B.Sc. (Hons)

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ ஆடி ௴ 2 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 10 (18-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-207

பஸ்மீது 'ஹெலி' சுட்டு

15 பயணிகள் பலி!

நெடுங்கேணியில் சம்பவம்

—அலுவலகச் செய்தியாளர் கே. ஆர்.—

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மீது ஹெலிக்கொப்டர் சுட்டும், ஷெல் குண்டு வீசியும் நடத்திய பயங்கரத் தாக்குதலில் மூன்று பெண்கள், இரண்டு முஸ்லிம் நபர்கள், பஸ் சாரதி உட்பட பதினைந்து பேர் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு நேற்றுக் காலை சென்ற முதலாவது பஸ்ஸே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியது.

நெடுங்கேணிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் தொடர்ந்து புலிகளுக்கும் - சிப்பாய்களுக்கும் இடையில் நேரடிச் சமர் நடைபெற்று வருகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

நேற்று அதிகாலை சுமார் மூன்று மணி அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் முல்லைத்தீவு—வவுனியா வீதியுல். நெடுங்கேணிப் பகுதியை சுற்றி வளைத்துச் சோதனை நடத்தினர்.

அவர்களுக்கு பாதுகாப்பாக ஹெலிக்கொப்டர்களும் பறந்துகொண்டிருந்தன.

இதேவேளை பகல் பத்து மணி அளவில் முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ் ஒன்று வந்துகொண்டிருந்தது.

அந்த பஸ்ஸில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய சுமார் 45 பிரயாணிகள் பயணம் செய்தனர்.

குறைந்த வேகத்தில்

நெடுங்கேணிப் பகுதியை இந்த பஸ் அடைந்ததும் வீதியில் பாலம் ஒன்று உடைந்திருந்ததன் காரணமாக பஸ்ஸின் சாரதி பஸ்ஸைக் குறைந்த வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தார்.

வானத்தில் பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் திடீரெனப் பதிந்து வந்து பஸ்மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதோடு, ஷெல் தாக்குதலும் மேற்கொண்டது.

இதனால் பஸ் சாரதியான இம்மானுவல் உட்பட சுமார் பதினைந்து பேர் வரையில் கொலையுண்டதாக அறிய வருகிறது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

18—07—1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6-00 முதல் 7-30 வரை
ராகுகாலம்:-
10-30 முதல் 12-00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சஷ்ராப்தி விரதம்

காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நேற்று நெடுங்கேணியில் நடந்த சம்பவத்தில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:

1 ஆர். கணபதிப்பிள்ளை (34 வயது) சாவகச்சேரி.
2 பி. மோகனவதி (22 வயது) முள்ளியவளை
3 ஏ. சசிதரன் (4 வயது) [illegible]
4 சிவானந்தன் (22 வயது) முல்லைத்தீவு.
5 சந்திரகுமார் (10 வயது) நெடுங்கேணி.
6 சிவபாக்கியம் (40 வயது) முல்லைத்தீவு.
7 எஸ். மகாலிங்கம் (43 வயது) ஆனைக்கோட்டை.
8 எஸ். கனகமனோகரன் (சட்டத்தரணி) (37 வயது). (உ-10)

வடபகுதிக்கு பெற்றோல்

அ'புரத்தில் விநியோகம்

—அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ஜே. பி. ரட்ணதுரை—

யாழ்ப்பாணம், ஜூலை 18

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வடபகுதிக்கான எரிபொருள் மீண்டும் அநுராதபுரத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

இதற்காக அங்கு வடபகுதி பவுஸர்களுக்கென பிரத்தியேக எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றும் திறக்கப்படும்.

அநுராதபுரத்தில் பெற்றோல் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பையடுத்து அங்கு வடபகுதிக்கான பெற்றோல் நிரப்புவது நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-5)

பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லை

அமிர்தலிங்கம் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18

பேச்சுக்களில் முன்னேற்றமே இல்லை.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.

பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருப்பதாக ஓர் அபிப்பிராயம் நிலவுகின்றது.

இது தவறு.

பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவ்வளவுதான். குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் இருப்பதாகக் கூற

(4ஆம் பக்கம் பார்க்க)

விசாரணை நடக்குமாம்

கொழும்பு, ஜூலை 18

மூதூரில் புதன்கிழமை நடைபெற்ற கொலைகள் குறித்து நீதித்துறை, பொலீஸ் விசாரணை நடத்தப்படும்.

இப்படி பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவல் படையை ஒழித்துக்கட்ட வருமாறு

விடுதலைப் புலிகள் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஊர்காவல்படை என்ற பெயரில் இயங்கும் [illegible] களைந்து எறிய முஸ்லிம் முற்போக்குச் சக்திகள் இணைந்து செயல்பட முன்வரும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் அழைப்பு விடுத்திருக்கிறார்.

எதற்காக இந்த ஊர் காவல்படை?—என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் சாரம் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாகி வருவதை மழுங்கடிக்கவே ஸ்ரீலங்கா அரசு ஊர் காவல் படை அமைப்பை உருவாக்கியுள்ளது.

தமிழ்பேசும் மக்களிடையே காணப்படும் சமூக, மத, வர்க்க வேறுபாடுகளைக் கூர்மையடையச் செய்வதன்மூலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதி வாகனங்கள்

2 முகாம்களில் மட்டும் சோதனை

அ. க. மாநாடு முடிந்தபின் அமுலாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடபகுதியில் இருந்து செல்லும் சகல பஸ் சேவைகளும், லொறிச் சேவைகளும் இனிமேல் இரண்டு தடை முகாம்களில் மட்டுமே சோதனையிடப்படும் என அறியவருகின்றது.

பாதுகாப்பு காரணங்களுக்காக சோதனை நடத்தப்படும் தடை முகாம்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்குமாம்.

இப்போது நடைபெறும் அரசியல் கட்சிகள் மாநாடு முடிந்த பின்னர் இந்தப் புதிய விதி நடைமுறைக்கு வரும் என்று கொழும்பில் கூறப்பட்டது.

கொழும்பில் நடைபெற்றுவரும் மாநாட்டிற்கும் தற்பொழுது அமுலில் இருந்து வரும் சகல வாகனங்களும், சகல இடங்களிலும் சோதனைக்குட்படுத்தப்படும் நடவடிக்கைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

இக்கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருக்கும். ஆனால் அதில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

வடபகுதிக்கு அப்பால் செல்லும் சகல பொருள்களும் அரச அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமானதல்ல.

இத் திருத்தம் விரைவில் நடைமுறைக்குவரும் பொழுது பொதுமக்கள் அதிருப்தி அடையவேண்டியிராது.

—இப்படி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-6)

வயாவிளான் தாக்குதலில்

ஏழு சிப்பாய்கள் பலி

ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

வயாவிளான் இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்த சிப்பாய்கள் மீது மக்கள் விடுதலைப் படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் ஏழு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு ஈ பி ஆர். எல் எவ். நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு:

நேற்று வயாவிளான் இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் வெளியே வந்தனர்.

இவர்களை தொடர்ந்து முன்னேறவிடாது மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த்தாக்குதல் நட

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



சுட்டுச் செத்தவையின்ரை சடலங்களைக் காணயில்லை எண்டால் அதுகள் எரிக்கப்பட்டு தீவிரவாதியள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் எண்டும் எடுக்கலாம் எல்லே...!

பூநகரியில் மீனவர் மீது சூடு!

பலர் பலியானதாக அச்சம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நேற்றுப் பூநகரி கடற்கரைப் பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதனால் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஐம்பதிற்கு மேற்பட்ட கறுப்புச் சட்டைக்காரர்களும், சிப்பாய்களுமே மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்தவர்களில் ஒருவரான பாஷையூரைச் சேர்ந்த மத்தியூஸ் அருள்நாயகம் (17 வயது) யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10)

35 பேரின் சடலங்கள்

உறவினர்களிடம் ஒப்படைப்பு

30 சடலங்கள் பற்றி தகவல் இல்லை

திருகோணமலை, ஜூலை 18

மூதூர் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த தமிழர்களில் 35 பேரின் சடலங்கள் நேற்றுக்காலை மூதூர் நீதிவானால் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை படையினரால் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 30க்கும் மேற்பட்ட சடலங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

மூதூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட 35 சடலங்களில் இரண்டு பெண்களின் சடலங்களும் இருந்தன.

அவை அடையாளம் காணப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

எல்லாச் சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களே காணப்பட்டன.

உயிரிழந்த 35 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு;

மு. விஜயகம், சி. குணசிங்கம், இ. ஆலப்பிள்ளை

(4ஆ பக்கம் பார்க்க)

30 தமிழர்கள் எங்கே?

திருகோணமலை, ஜூலை 18

மூதூர்ப் படுகொலையின் பின்னர் கறுப்புச் சீருடையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 30க்கு மேற்பட்ட தமிழரின் நிலை என்ன?

இது குறித்து மூதூர் வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன் அதிகாலை கறுப்புச் சீருடையினர் என்று கூறப்படுவோர் மேன்காமம், மல்லிகைத்தீவு, பெருவெளி, பணச்சேனை ஆகிய கிராமங்களைச் சுற்றி தேடுதல் நடத்திய போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட 39 பேரின் சடலங்களே கண்டுபிடிக்கப்பட்டன. இதில் 4 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

கிராமங்களைச் சுற்றி வளைத்த சீருடையினர், குடிமக்களை வெளியே வர சொல்லிவிட்டு தாறுமாறாகச் சுட்டுத் தள்ளினராம்.

பின்னர் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டதாம். இதில் 50க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகின.

இப் படுகொலைச் சம்பவத்தினால் மூதூர் சோகமயத்தில் மூழ்கியது. (உ-எ-150)

சடலங்களை கொண்டுவர பொலீஸார் மறுப்பு

திருகோணமலை, ஜூலை 18

மூதூரில் கடந்த புதன்கிழமை நடந்த படுகொலையில் உயிரிழந்த தமிழர்களின் சடலங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்க்க அப்பகுதிப் பொலீஸார் மறுத்து விட்டனர்.

இதைத் தொடர்ந்து இராணுவச் சிப்பாய்களே சடலங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட விதம் குறித்து பொலீஸார் அடைந்த வேதனையின் காரணமாகவே சடலங்களைத் தாங்கள் கொண்டு வர முடியாது என்று அவர்கள் மறுத்தனராம். (உ-எ-150)

கூட்டணி கண்டனம்

கொழும்பு, ஜூலை 8

மூதூர், அடம்பன், நெடுங்கேணி பகுதிகளில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டது குறித்து கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் நேற்று பலத்த கண்டனத்தைத் தெரிவித்தனர்

இத்தகைய செயல்கள் தொடருமானால் தாங்கள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற முடியாது என்றும் அவர்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியதாகத் தெரியவருகிறது.

எமது மக்களின் பெரு நிர்ப்பந்தத்திற்கு மத்தியிலும் உங்களுடன் பேச நாங்கள் வந்திருக்கிறோம். இத்தகைய செயல்கள் நடக்காமல் பாதுகாப்புப்

(4ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் கட்சி மாநாடு

குழுநிலைக் கூட்டத்தில் இழுபறி நிலைமை

கொழும்பு, ஜூலை 18

குழுநிலையில் நடைபெறும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் முக்கிய அம்சங்களில் ஒருமித்த கருத்துக்களை உருவாக்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது

தமிழை உத்தியோக மொழியாக்குவது, காணிக்குடியமர்வு, மாகாணப் பொலீஸ் அதிகாரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆபத்து என்றாலும் வேண்டும் அந்த 'பாஸ்'

யாழ்ப்பாணம், ஜூலை 18

நெடுங்கேணி ஹெலிக்கொப்டர் தாக்குதலில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருந்த இரண்டு பேரை அவசர அவசரமாக யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த அம்புலன்ஸ் வண்டி 'பாஸ்' இல்லாத காரணத்தினால் ஆனையிறவு முகாமைத் தாண்ட அனு

(4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் ஷெல் தாக்குதல்

2 வயதுச் சிறுமி உட்பட இருவர் மரணம்

பருத்தித்துறை, ஜூலை 18

பருத்தித்துறையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் இருவர் பலியானார்கள். ஓர் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமுற்றனர்.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து புதன்கிழமை மாலை 5-00 மணியளவில் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் கடற்கரையோரமாக வெளியே வர முற்பட்டார்கள்.

அச்சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் சுமார் இரண்டரை மணி நேரமாக நேரடிச் சமரில் ஈடுபட்டார்கள்.

போராளிகள் நவீனரக சிறு பீரங்கிகளை உபயோகித்து பதில் தாக்குதல் மேற்கொண்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையி [illegible] வரும் இன்றைய நாளிதழ்

இந்து ஆலயங்களுக்கு அருகிலுள்ள முகாம்களை அகற்றுக

ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை.18

இந்து ஆலயங்களுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்களை அப்புறப்படுத்தி நித்திய பூசைகள் மகோற்சவங்களை நடாத்த உதவுங்கள்.

இப்படி இலங்கையில் உள்ள இந்துக் கோயில்களினதும், ஸ்தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்பு, ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம், அமைப்பின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நல்லை ஆதீன மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்துக்கு சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் தலைமை வகித்தார். நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்துக் கோயில்கள் தொடர்ந்தும் சிதைவுக்குள்ளாவது குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. திருமலை கோணேசர் ஆலயம், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், கோட்டை முனியப்பர் ஆலயம் ஆகியவற்றில் வருடாந்த மகோற்சவங்கள் இடம்பெறவில்லை. வேறு பல கோயில்களில் நித்திய பூசையே இடம் பெறுவதில்லை. ஆகவே இந்த ஆலயங்களுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.

2. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தின் போது இராணுவ நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

3. கோயில்களை, சொத்து உடைமைகளிலும் பார்க்க மேலாகப் பாதுகாத்து தீய சக்திகளை விழிப்புடன் இருந்து விரட்டி அடிக்க வேண்டிய அவசியம் பற்றி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வது

4. தற்போதைய அமைதியற்ற சூழ்நிலையில் அகதிகளாக, அனாதைகளாகியுள்ள மக்கள் மத்தியில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்பதை சகல மதங்களும் கவனத்தில்கொள்ள வேண்டும். அகதிகள், அனாதைகளுக்குப் பொறுப்பானவர்கள் இதற்கு இடமளிக்கக் கூடாது (உ-எ)

படையினரால் கைது செய்யப்பட்ட

முஸ்லிம் இளைஞன் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜூலை 18

ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞன் ஒருவன், திருமலை இறக்கக் கண்டிப் பகுதியில் துப்பாக்கிச் சூடுபட்டு உயிரிழந்தான்.

இறந்தவர் பக்கீர் பாவா பாபுதீன். நிலாவெளி, இறக்கக்கண்டியைச் சேர்ந்த இவரின் மரணவிசாரணையில் சார்ஜண்ட் ஹேரத்பண்டா சாட்சியமளிக்கையில் சொன்னதாவது;

தகவல் கிடைத்து இறந்தவரைக் கைது செய்தோம். தான் 'ரெலோ' இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் ஆயுதம் எங்கே புதைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டித் தரலாம் என்றும் இறந்தவர் சொன்னார்.

அதற்கு இணங்க அவரைக் காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்றோம். அங்கு மண்வெட்டியைக் கொண்டு நிலத்தைத் தோண்டும் சமயம் இறந்தவரைத் துப்பாக்கிசூடு தாக்கியது. திடீரென்று நாம் திருப்பிச்சுட்டோம். இறந்தவரை யார் சுட்டது என்பது எமக்குத் தெரியாது — இப்படி சாட்சி சொன்னார்.

கொலை என்று பதில் நீதிவான் திரு. இரா. சந்திரபாலன் தீர்ப்புக் கூறினார் (உ-எ-150)

சுகாதார அமைச்சு அனுப்பியது

யாழ். ஆஸ்பத்திரிக்கு பழைய அம்புலன்ஸ்

அதுவும் வரும் வழியில் 'மக்கர்'

யாழ்ப்பாணம், ஜூலை.18

யாழ்-ஆஸ்பத்திரிக்கு புதிய அம்புலன்ஸ் தேவை எனக் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் பழைய அம்புலன்ஸ் வண்டியே வழங்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட இந்த அம்புலன்ஸ் வரும் வழியில் நேற்று முன்தினம் புளியங்குளத்தில் பழுதடைந்து விட்டதால் இ. போ. ச. கிரேன் மூலம் கட்டி இழுத்து வரப்பட்டது

யாழ்மாவட்டத்தில் மிகவும் அத்தியாவசியமாக விளங்கும் யாழ் ஆஸ்பத்திரியில் தற்பொழுது ஓரேயொரு அம்புலன்ஸ் மட்டுமே ஓடிக்கொண்டிருக்கிறது

எனவே புதியதொரு அம்புலன்ஸ் வண்டி யாழ் - ஆஸ்பத்திரிக்கு தேவையென யாழ்-வைத்திய அத்தியட்சகர் திரு. என். நச்சினார்க்கினியன் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

யாழ்-ஆஸ்பத்திரிக்கு புதிய அம்புலன்ஸும், புதிய கார் ஒன்றும் சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் தற்பொழுது வடபகுதியில் நிலவும் சூழ்நிலை காரணமாக இவைகளை அனுப்பி வைக்க சுகாதார அமைச்சு மறுத்து விட்டது.

இதற்குப் பதிலாக மறு சீரமைக்கப்பட்ட பழைய அம்புலன்ஸ் ஒன்று சுகாதார அமைச்சினால் யாழ்-ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டது. (உ-10)

வெடிகுண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

மன்னார்—அனுராதபுரம் வீதியில் ஆண்டியா புளியங்குளம் என்ற இடத்தில் ரோந்து சென்ற சிப்பாய்கள் அங்கு மரமொன்றில் கட்டப்பட்டிருந்த சில வெடிகுண்டுகளை மீட்டெடுத்ததாக தெரியவருகிறது.

இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியதாகவும் மன்னார் அனுராதபுரம் போக்குவரத்துச் சேவைகள் நேற்று ஸ்தம்பித நிலையை அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து மன்னார் வந்த தபால் பஸ்களும் பறையனாலங்குளத்தில் வைத்து திரும்பிச் சென்றதாக கூறப்படுகிறது (உ-10)

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கு இடமில்லையா?

பேராசிரியர் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த்துறை இல்லாத கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் பண்பாட்டுச் சோலை ஆவதற்கு பதிலாக பாலைவனமாகி விடும்.

யாழ் பல்கலைக் கழக கல்வித்துறைப் பேராசிரியர் கலாநிதி ப. சந்திரசேகரம் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் தொடர்ந்து கூறியுள்ளதாவது:-

இவ்வாண்டு ஒக்டோபரில் உருவாகவுள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழியல் துறை இல்லாமை கவலை தருகிறது.

கிழக்கிலங்கை தமிழ் மொழி பேசும் சைவ இஸ்லாமிய கிறிஸ்தவ மக்களைக் கொண்டு விளங்கும் ஒரு பண்பாட்டுச் சங்கமமாகும்.

இப்பல்கலைக் கழகத்தில் அராபிய மொழிப் பேராசிரியர் நியமிக்கப்படும் அதேவேளையில், தமிழ் மொழிக்கும், சைவ சமய இயலுக்கும், கிறித்துவஇயலுக்கும் இடமளிப்பதன் மூலம் இப்பல்கலைக் கழகப் பண்பாட்டியற் பீடம் நிறைவுபெறும்

தமிழ்த்துறைப் பேராசிரியர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

கிழக்கிலங்கை வரலாற்றை எடுத்துப் பார்ப்போனால், இது தமிழ் சைவப் பாரம்பரியம் நிறைந்த பிரதேசமாகும். வரலாற்று அறிஞர்கள் இலங்கையின் திருகோணமலைப் பிரதேசத்திலேயே கூடிய சைவக் கோயில்கள் இருந்ததெனக் கொள்வர்

எனவேபல்கலைக்கழக மானியக் குழு இவ்விடயத்தை மறுபரிசீலனை செய்து உடனடியாகத் தமிழ்த்துறை, சைவசமயவியல், கிறித்துவ இயல் போன்ற துறைகளை உருவாக்குதல் வேண்டும்.

இவ்வாறு கலாநிதி சந்திரசேகரம் தனது கோரிக்கையில் வலியுறுத்தி உள்ளார். (உ-9)

வட இலங்கை வைத்திய கல்லூரி

உடற்கூறு பிரிவுக்கு தனியான கட்டடம்

மூளாய் ஆஸ்பத்திரியில் அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வட இலங்கை வைத்தியக் கல்லூரியின் வளர்ச்சியில் உடற்கூறு வைத்தியப் பிரிவுக்கான கட்டடம் நிறுவப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்படி வைத்தியக் கல்லூரியின் ஆளுநர்களில் ஒருவரான டாக்டர் சேவியர் சொன்னார்.

உடற்கூறு வைத்தியப் பிரிவுக்கான கட்டடத்துக்கு அத்திவாரக் கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது

டாக்டர் சேவியர் கல்லூரி செயற்குழு உறுப்பினர் டாக்டர் சிவானந்தராஜா, மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி சங்கத் தலைவர் திரு. சிவகுரு ஆகியோர் அத்திவாரக் கல் நட்டனர்.

பின்னர் நடந்த கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் சேவியர் சொன்னதாவது;

வைத்தியக் கல்லூரிக்கு இன்னும் கட்டடங்கள் நிறுவப்படவுள்ளன.

அரச வைத்தியக் கல்லூரிகளில் அனுமதி வழங்கப்படாத, தகுதியுள்ள மாணவர்களுக்கு இடமளிக்கவே வட இலங்கை வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி [illegible] ஆளுநர் சபைச் செயலாளர் டாக்டர் பிலிப்ஸ் பேசுகையில்;

தமிழ் இனத்துக்கு சிறந்த சேவையை நாம் செய்கின்றோம் — என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சி மூளாய் போதனா ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது. (உ-எ)

அந்தியேட்டி கிரியையும் நன்றி நவில்தலும்

தோற்றம்:
1912 - 09 - 20
மறைவு:
1986 - 06 - 20

உயர்திரு
ஆறுமுகம் சுப்பிரமணியம்
(பொன்னையா)
இளைப்பாறிய ஆசிரியர்

எங்கள் குடும்பத்தின் தெய்வமே! குழந்தை உள்ளமே, மக்கள் சேவையின் தலைவனே, எங்களிடம் ஒன்றும் சொல்லாமல் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டு,இறைவன் அடி சேர்ந்துவிட்டாய் நாங்களும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மரணச் சடங்கில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அந்தியேட்டிக் கிரியை 19 - 7 - 86 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வந்து கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பெருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முகவரி:
சி சண்முகலிங்கம்,
அஞ்சல் அதிபர்,
கொட்டுவளவு,
வல்வெட்டி.

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

கிராம அபிவிருத்தி மிக அவசியமானது

சர்வோதய பணிப்பாளர் உரை

உடுப்பிட்டி, ஜூலை 18

தற்போதைய சூழ்நிலையில் யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் பலவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டியது மிக அவசியமாகும்.

யாழ் மாவட்ட சர்வோதய வெளிக்களப் பணிப்பாளர் திரு. கே. கதிரமலை இவ்வாறு கூறினார்.

வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் யாழ். மாவட்ட சர்வோதய வெளிக்களப் பணிப்பாளர் திரு. கே. கதிரமலை வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

விழாவில் திரு. கே. கதிரமலை தொடர்ந்து பேசுகையில்,

யாழ்மாவட்டத்திலுள்ள கிராமங்கள் அனைத்தும் அபிவிருத்தி குன்றிய நிலையில் காணப்படுகின்றன. இக்கிராமங்களில் நீண்டகாலமாகஅபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாதது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றார்.

வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் பேசுகையில் நிறுவனம் மேற்கொண்டுவரும் அபிவிருத்தி வேலைகள் வதிரிக் கிராமத்தில் மட்டுமல்லாமல் அயற் கிராமங்களுக்கும் பரவலாக்கப் படவேண்டும் என்றார்.

நிறுவனத்தின் தலைவர் திரு. எம். எஸ். சினித்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மிருக வைத்திய கலாநிதி எம். தங்கராசா, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு நிர்வாக அலுவலர் திரு. எம். தம்பிப்பிள்ளை, தேவரையாளி இந்துக் கல்லூரி உதவி அதிபர் திரு சி. திரவியம், யாழ் பனை அபிவிருத்திச்சபைச் சந்தைப் படுத்தும் அலுவலர் திரு கே. வி. திவ்வியராசா, அரசகரும மொழித் திணைக்கள அத்தியட்சகர் திரு. வி. சிவராசசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-157)

தெல்லிப்பளை - பன்னாலை வரத்தலம்
ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்

பத்தாவது ஆண்டு மகோற்சவ விஞ்ஞாபனம்

விநாயகநேயச் செல்வர்களே!

நிகழும் மங்களகரமான அக்ஷய ஸ்ரீ ஆவணி மீ 7ஆம் திகதி (23-08-1986) சனிக்கிழமை பகல் 12.15 மணிக்குத் துவஜாரோகணமாகித் தொடர்ந்து பன்னிரு தினங்கள் மகோற்சவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளதால் அடியார்கள் அனைவரும் தங்களால் இயன்றளவு பணவுதவியாகவோ, பொருளுதவியாகவோ கொடுத்து பன்னிரு மஹோற்சவப் பெருநாட்களிலும் ஆலயத்திற்கு வந்து விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

மேற்கூறிய தேவஸ்தான துவஜாரோகணம் பொது உபயமாகையால் இதற்கான பணத்தையோ, பொருட்களையோ கொடுப்பதற்கு நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செல்வி மல்லிகா மகேஸ்வரக்குருக்கள்,
வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
பன்னாலை, தெல்லிப்பளை.

மக்கள் முகம்

இடமாற்றமும் பதவி உயர்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ் மாவட்ட சபை சன்னாகம் உப அலுவலகத்தில் அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. இ. இராமலிங்கம் பதவி உயர்வு பெற்று வவுனியா நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட சபை (தலைமைப் பீடம்) உதவிச் செயலாளர் திரு பொ. பாலசிங்கம் வாரத்தில் இரண்டு தினங்கள் சன்னாகம் உப அலுவலகத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (இ-எ

இலக்கிய சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 18

"இலக்கிய சர்ச்சைகள்" என்னும் பொருள் பற்றி கவிஞர் இ. முருகையன் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையன்று காலை பத்து மணிக்கு யாழ் மலாயன் சங்கக் கட்டிடத்தில் உரையாற்றுவார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளையின் ஆதரவில் நடைபெறும் இக்கருத்தரங்குக்கு பேராசிரியர் நந்தி தலைமை வகிப்பார். (உ-9

நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஜூலை.18

புதனன்று நடைபெற்ற லொறி, மினிபஸ் பேரணியில் பங்குபற்றி அது வெற்றி பெற உதவிய அனைவருக்கும் வடபிராந்திய லொறி, பஸ் போக்குவரத்துச் சங்கமும், யாழ் முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் கூட்டாக நன்றி தெரிவித்திருக்கின்றன.

லொறி உரிமையாளர்கள், வர்த்தக சங்கங்கள், பல்கலைக்கழக பாடசாலை மாணவர்கள், ஈழவர் முன்னணி, மக்கள் பேரவை அமைப்புகள், பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

வீட்டினுள் நுழைந்த ஊர்காவல் படையினர்

தாய், அண்ணன், சகோதரிகளை கண்முன்னால் சுட்டுக் கொன்றனர்

பாவற்குளம் சம்பவத்தில் உயிர்தப்பிய பெண் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தன்னைத் தாக்கிய ஊர்காவல் படையினரின் ஆயுதத்தைப் பறிக்க முயன்ற என் அண்ணனை நோக்கி மற்றைய ஊர்காவல் படையினர் சுட்டதில் அம்மா, அண்ணன், தங்கச்சிகள், அடுத்த வீட்டு முதியவர் ஆகிய ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பாவற்குளம் 10 ஆம் யுனிற்றில் நடைபெற்ற 11 கொலைகள் சம்பவத்தில் மயிரிழையில் உயிர்தப்பிய செல்வராசா தேவி (25 வயது) இவ்வாறு சொன்னார்.

கையில் காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரி எட்டாம் வாட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் இப்பெண் மேலும் சொன்னதாவது;

13 ஆம் திகதி பிற்பகல் 3 மணி அளவில் எமது வீட்டை நோக்கி நான்கு பேர் ஆயுதங்களுடன் ஓடிவந்தனர்.

அவர்களில் இரண்டு பேர் இராணுவ உடையிலும் மற்றைய இரண்டு பேர் ஷேர்ட்டும் காற்சட்டையும் அணிந்திருந்தனர்.

இரண்டு பேர் வெளியில் நிற்க இராணுவ உடையில் வந்த இரண்டு பேர் எமது வீட்டுக்குள் புகுந்தனர்.

அப்பொழுது வீட்டுக்குள் எனது அண்ணன் படுத்திருந்தார். அவரிடம் அடையாள அட்டை கொடுக்கச் சென்ற போது என்னையும், அண்ணனையும் பலமாக அந்த ஊர்காவல் படைவீரன் தாக்கினான்.

அப்பொழுது அவனது ஆயுதத்தை எனது அண்ணன் பறிக்க முற்பட்டார்.

நானும் அண்ணனுக்கு உதவியாக சேர்ந்து ஆயுதத்தைப் பறிக்க முற்பட்ட வேளையில் வெளியில் நின்ற மற்றைய இரண்டுபேரில் ஒருவன் [illegible] சுட்டான். [illegible] னின் நெஞ்சைக் குண்டுகள் துளைத்துச் சென்றன. எனக்கும் கையில் காயம் ஏற்பட்டது நானும் அண்ணனும் கீழே விழுந்தோம்.

அப்போது அம்மாவும் தங்கச்சிகள் இரண்டு பேரும் அங்கு ஓடிவந்தனர்.

அவர்களை நோக்கியும் அந்த ஊர்காவல் படையைச் சேர்ந்தவன் சுட்டான்.

அண்ணனைத் தாக்கும் போது புலி எங்கே? புலி எங்கே என்று கேட்டே தாக்கினர்.

வீட்டினுள் நடந்த வெறியாட்டம் முடிந்து வெளியே போன அவன் எமது முற்றத்தில் நின்ற வயோதிபர்களை நோக்கி சுட்டான் இதனால் அடுத்த வீட்டு முதியவர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து மரணமானார்.

மற்றவர் சூட்டுக் காயங்களுடன் ஓடிய போது கிணறு ஒன்றினுள் விழுந்து மரணமானதாக அறிந்தேன்.

சுமார் ஒரு மணி நேரமாக இந்த நாடகத்தை நடத்திய இவர்கள் ஜீப் ஒன்றில் ஏறிச் சென்றனர்.

மரணமான எனது அம்மா, தங்கச்சிகள், அண்ணன், வயோதிபர்கள் ஆகியோரது சடலங்களை மயானத்திற்கு எரிப்பதற்காக அடுத்த நாள் மாட்டுவண்டியில் கொண்டுபோனார். எனது இன்னொரு அண்ணன்.

வழியில் வந்த இராணுவத்தினர் அண்ணனுடன் அவ்வுடல்களையும் தம்முடன் கொண்டு சென்றனர்.

எல்லோரையும் இழந்து அனாதரவான நிலையில் நான் நிற்கிறேன்.

இப்படி அவர் அழுதபடி சொன்னார்.

சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நால்வரும் வருமாறு:-

எஸ். வீரசிங்கம் (28 வயது) (அண்ணன்)
சு. பராசக்தி(48வயது) (தாய்)
யோகமங்களாம் (19 வயது) சகோதரி)
ஜெயமணி (13வயது) (சகோதரி)

ஏனையோர் விவரம் வருமாறு:

கலியாணி அரியநாதன் (30வயது)
ஸ்ரீதரன் (14வயது)
கணபதி (70வயது)
வைத்திலிங்கம் (38 வயது)
குமார் (14வயது)
குவேந்திரன்(15வயது)

(இ-10)

ஈழத்து தமிழ் பேசும் பெருமக்களுக்கும் சுதந்திர தமிழ் ஈழத்தை வென்றெடுக்கப் போராடும் புனித இயக்கங்களுக்கும்

பணிவான விண்ணப்பம்

அரச கெடுபிடிகளின் மத்தியிலும் வேறுபல சிரமங்கள் மத்தியிலும் தமிழ் பேசும் பெருமக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் இன்னோரன்ன அத்தியாவசியப் பொருள்களையும், யாழ் பெருமக்களுக்குத் தருவிக்கும் தலையாய பணியில், யாழ். லொறிப் போக்குவரத்துச் சேவையினர் ஈடுபட்டிருப்பது எல்லோருக்கும் நன்குதெரிந்ததே.

எமது ஸ்தாபனம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வழமையான சிரமங்களுக்கூடாகப் பொருள்களை லொறியில் கொண்டுவரும் வேளையில் அந்த லொறி எமது சொந்த மண்ணில் விசுவமடு, றெட்பாறுவுக்கு அருகாமையில் 14—6—1986இல் கடத்தப்பட்டமை தமிழ் பேசும் பெருமக்களுக்கு குறிப்பாக பொருள் நுகர்வோருக்கு இழைக்கப்பட்ட அநீதியாக நாம் கருதுகிறோம்.

இந்த அநீதியையும் அநியாயத்தையும் கண்டித்து சில பொது ஸ்தாபனங்களும் பொது அமைப்புக்களும் சில புனித இயக்கங்களும் இத்தவறை இழைத்தவர்கள் தமது தவறை ஒப்புக் கொண்டு அதற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று அறிக்கைகள் விட்டிருந்தும் இதுவரை எந்தவிதமான பலனையும் காணோம்.

லொறி போக்குவரத்துச் சேவை எத்தகைய அத்தியாவசிய சேவை என்பதைத்தமிழ் பேசும் பொது மக்கள் நேற்று முன்தினம் ஒருங்கிணைந்து நடத்திய பூரண ஹர்த்தால் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த எமது லொறிச் சேவைக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்துக்கு ஈடுசெய்யும் பணிக்கு தமிழ்பேசும் பெருமக்களினதும் புனித இயக்கங்களினதும் பேராதரவை மிகவும் தாழ்மையுடன் மீண்டும் மீண்டும் வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்,
தமிழ்பேசும் பெருமக்களின் சேவையிலீடுபட்டிருக்கும்,
எஸ். வி. முருகேசு ஸ்தாபனத்தினர்.

உதய சங்கற்பம்

உண்மையான மனிதன் யாரையும் துவேஷிப்பது இல்லை.

—நெப்போலியன்

உதயன்

[illegible]

இல. 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், 18-07-86
தொலைபேசி 24803
22073
த.பெ. 23

யார் காதில் பூ சுற்றுகிருர்?

வடக்கில், மன்னார் மாவட்டத்தில், அடம்பனில் நடந்த விமானத் தாக்குதல் மற்றும் அட்டகாசங்களில் மொத்தம் 47 பேர் உயிரிழந்திருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 90 சதவிதத்தினருக்கு மேற்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்கள்.

வடக்கில், வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம் தமிழ்க் கிராமத்தில் 11 பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். சீருடைக்காரர்களே சிவில் உடையில் சென்று மனித வேட்டையாடியதாகச் சொல்லப்படுகிறது.

கிழக்கில், திருமலை மாவட்டத்தில் மூதூரில் உள்ள மல்லிகைத்தீவை அண்டிய பகுதியில் 67 தமிழ் அகதிகள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட கொடுமை நடந்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

அப்பாவித் தமிழ் மக்களை அரக்கத்தனமாகக் கொன்று குவித்த இந்தச் சம்பவங்கள் இந்த வாரத்தில் நடந்துள்ளன. அதாவது அரசியல் கட்சிகள் மாநாட்டு வாரத்தில் நடந்துள்ளன இந்த கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் அனேகமாக ஆயுதப்படையினரே.

வடக்கு, கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வதை அரசியல் மாநாடு நடக்கும் போதாவது நிறுத்த வேண்டும் என்று அரசு நினைக்கவில்லையா? அது குறித்துக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லையா?

பேச்சுவார்த்தைக்கு முன்னேடியாக, சமாதானத்துக்கு உதவியாக, யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதி சாதகமாக ஆராய்வதாகச் சொல்லப்பட்டது. ஆனல் அதற்கான அறிகுறி எதுவுமே தெரியவில்லை.

யுத்த நிறுத்தத்துக்கு நேர் எதிர்மாருக தமிழ் மக்கள் மீது அரக்கத்தனம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. அவர்கள் கொடூரமாகக் கொன்று குவிக்கப்படுகிருர்கள்.

இதில் மிகவும் வேடிக்கையானது என்னவெனில் ஜனாதிபதி கூட்டணியினருக்குக் கூறியிருக்கும் தகவல். வடக்கு, கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவது குறித்து முறையிட்ட போது, தமக்குத் தெரியாமல் அது நடைபெறுகிறது என்ற தோரணையில் ஜனாதிபதியின் பதில் இருந்தது.

தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இராணுவ அதிகாரிகளுடன் தாம் விவாதிக்கப் போவதாக அவர் கூறியிருக்கிருர். என்னே அதிசயம்!

சர்வவல்லமையும், அதிகாரமும் படைத்த ஒரு தலைவருக்கு, இந்த நாட்டின் தமிழ் மக்களை ஆயுதப்படையினர் அழித்து வருவது தெரியாதா? இந்தக் கட்டத்திலாவது அதனை நிறுத்துமாறு உத்தரவிட அதிகாரம் இல்லையா? இராணுவ அதிகாரிகளுடன் விவாதிக்கப் போகிருராம்!!

இல்லை இல்லை, நாம் தமிழ் மக்களைக் கொல்லாமல் இருக்கமாட்டோம் என்று இராணுவ அதிகாரிகள் சொல்லிவிட்டால் இவர் அதனைக் கேட்டுக் கொண்டு, நான் என்ன செய்யமுடியும் என்று சொல்லப் போகிருரா?

தமக்கும் இனப்படு கொலைக்கும் சம்பந்தமில்லை. இராணுவ அதிகாரிகள்தான் செய்கிருர்கள் என்றுசொல்கிருரா? இவர் "யார் காதில் பூச் சுற்றப்பார்க்கிருர்"? கூட்டணியினருக்கா, தமிழ் மக்களுக்கா, அல்லது உலக நாடுகளுக்கா?

அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வது இவருக்கு உடன்பாடில்லை என்ருல், அதனை நிறுத்தக் கண்டிப்பான உத்தரவு போட வல்லமை இல்லையா? அல்லது அவர் வழங்கும் உத்தரவை இராணுவ அதிகாரிகள் ஏற்று நடக்கிருர்கள் இல்லையா?

நிலைமை அவ்வாருனல், ஒன்றில் தமது உத்தரவுக்குப் பணியாத படை அதிகாரிகளை ஜனாதிபதி வெளியேற்ற வேண்டும். அல்லது தமது ஏலாத்தன்மையை ஏற்கும் விதத்தில் தாம் பதவியை விட்டு விலக வேண்டும்.

ஆனல் இரண்டுமே நடக்கப் போவதில்லை. ஏனெனில் அரசுதான் படைகளைக் கொண்டு தமிழ் இன அழிப்பைச் செய்து வருகிறது. அதை மறைக்கவா அப்படியொரு பதில்?

சமாதானப் பேச்சு என்ற இவ்வேளையிலும், இன அழிப்புத் தொடர்கிறது. அதனை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அசுகைதானும் இன்னும் இல்லை. ஜனாதிபதி கூட்டணித் தூதுக்குழுவினருக்குத் தெரிவித்த கூற்று அதனை ருசுப்படுத்துகிறது. அவ்வாருயின் பேச்சுவார்த்தையின் அர்த்தம் என்ன? பயன் ஏது?

தமிழன் அவமாக அழியப் பிறந்தவனு? அரச படைகளால் அழிக்கப்படுவதற்கு என்றே பிறந்தவனு?

இலங்கையில் நடக்கும் அரக்கத்தனம், நீதி, நியாயம் அறிவு படைத்த அகில உலக நாடுகளுக்கும் தெரியட்டும். "1983 கறுப்பு ஜூலை" தமிழ்ப் பகுதிகளில் தினமும் நிரந்தரமாகிவிட்டது என்பதையும் அவை புரிந்து கொள்ளட்டும்.

முருங்கைத் தடிகள் தந்து உதவுக

யாழ்ப்பாணம், ஜூலை 18

குடியேற்றப் பகுதிகளில் விநியோகம் செய்வதற்கு முருங்கைத் தடிகள் ஏராளமாகத்தேவை என்று மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா தெரிவித்தார்.

இவற்றை இலவசமாகக் கொடுத்துதவ விரும்புபவர்களைத் தம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ)

பயங்கரவாதத்துடன் பாகிஸ்தான் தொடர்பு

போதுமான ஆதாரம் உண்டு என்கிருர் ராஜீவ்

புதுடில்லி, ஜூலை.17

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுடன் பாகிஸ்தானுக்கு நிறைய தொடர்புகள் இருக்கின்றன என்பதற்கு போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

ஏற்கனவே பிடிபட்ட பயங்கரவாதிகளிடமிருந்து கிடைத்த தகவல்களைவிட பஞ்சாப்பின் பயங்கர வாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளிப்பது குறித்து மேலும் பல முக்கிய சான்றுகள் இந்தியாவிற்குக் கிடைத்துள்ளன.

ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கும், மனித உரிமைகள் சபைக்கும் இவை சமர்ப்பிக்கப்படும்.

இது குறித்த விபரங்களை தற்பொழுது வெளியிடுவது பொருத்தமானதாக இராது என பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-ஒ)

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ பொருளாதார உதவிகள்

வாஷிங்டன், ஜூலை 17

பாகிஸ்தானின் இராணுவத்தை நவீனமாக்கவும் அதன் போர்முறைகளை அபிவிருத்தி செய்யவும் பொருளாதாரத்தை முன்னேற்றவும் அமெரிக்கா தொடர்ந்தும் ஊக்கமளிக்கும்.

பாகிஸ்தான் பிரதமர் முகமதுகான் யூனிஜோவை வெள்ளை மாளிகையில் வரவேற்று உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி றேகன் வெளியிட்ட கருத்து இதுவாகும்.

இந்து சமுத்திரப் பகுதியில் வல்லரசுகளின் ஆதிக்க அதிகரிப்பாலோ அல்லது வேறு வன்செயல்களாலோ பாகிஸ்தான் தாக்கப்படாமல் பாதுகாக்கப்படுவது அவசியம் என்று றேகன் கூறினார்.

அதனால் பாகிஸ்தானின் இராணுவம் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-ஒ)

செய்திச் சரம்

தமிழ் நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான மூலப்பொருள்கள் பற்றாக் குறையை நீக்க ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டும் என மத்திய அரசை தமிழக மின்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் வற்புறுத்தியுள்ளார்.

*

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றத் தலைவராக பி. குழந்தைவேலு நியமிக்கப்பட்டுள்ளார்.

*

கனடாவில் இம்மாதம் 23 ஆம் திகதி முதல் காது, மூக்கு, தொண்டை மருத்துவம் தொடர்பான 12 ஆவது சர்வதேச மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

*

மிஸோ தேசிய முன்னணியுடன் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் மிஸோராமில் கிளர்ச்சி முடிந்துவிட்டதாக அஸாம் மேகாலய கவர்னர் பீஷ்மநாராயணசிங் கூறினார்.

*

இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியது.

*

கங்கை நீர் பட்டுவாடாவில் இந்தியாவும் — பங்களாதேஸும் விரைவில் ஒரு உடன்பாட்டுக்கு வரும் என பங்களாதேஸ் ஜனாதிபதி எர்ஷாட் தெரிவித்தார்.

*

அணுசக்தி மிக்க நீர் மூழ்கிக் கப்பல்களை 1990 ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கத் தொடங்கிவிடும் என்ற குற்றச்சாட்டை ஜப்பான் நிராகரித்துள்ளது.

*

காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளை பகாமாஸ் — பப்புவா நியூகினியும் பகிஷ்கரிக்க உத்தேசித்துள்ளது.

வெளி உலகில்

தந்தை மரணம்

வார்ஸோ, ஜூலை 17

போலாந்து தேசத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் எட்வேர்ட் லிப்பின்ஸி தமது 97 ஆவது வயதில் மரணமானார். 1904 ஆம் ஆண்டு போலந்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து முதல் இறுதி வரை பல போராட்டங்களில் முன் நின்றவர் லிப்பின்ஸியாவர். (இ-எ)

அமெரிக்காவில் மரண தண்டனை

அமெரிக்க வரலாற்றில் முதல் தடவையாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

16 வயது மாணவி ஒருத்தி பெண் ஒருவரை படு பயங்கரமாகக் கொலை செய்ததை அடுத்து இத் தண்டனை விதிக்கப்பட்டது. (இ-ஒ)

நீயும் நானும் ஒன்று

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

இந்து சமயத்தின் அடிப்படையான நூல்கள் வேதங்கள். அவை இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என நான்கு வகைப்படும்.

ஒவ்வொரு வேதத்திற்கும் பல கிளைகள் உள்ளன. ஒவ்வொரு வேத கிளையும் அறம், பொருள், இன்பம் இம் மூன்றையும் சொல்லக் கூடிய உபதேச மொழிகளாகவும், வீடு பேறான மோக்ஷத்திற்கு சாதகமான உபாசனை ஞானம் இவைகளைப் பற்றி சொல்லக் கூடிய உபதேசங்களையும் சொல்கிறது.

உபாசனம், ஞானம் இவைகளைப் பற்றிச் சொல்லக்கூடிய பகுதிகளுக்கு உபநிஷத் என்று பெயர். அதாவது சமீபத்திற்கு அழைத்துச் செல்லுதல். குருவினுடைய அருளினால் அறியாமைகள் எல்லாம் சிதறிப் போய்விடும் என்றும் பொருள். ஒரு மனிதனுடைய வாழ்வே தன்னுடைய உண்மையான சொரூபத்தை உண்மையான நிலையைத் தெரிந்து கொள்வதில்தான் அடங்கியிருக்கிறது.

உண்மை என்பது எந்த ஒரு காலத்திலும் மாருமல் ஒரே நிலையில் இருக்கக் கூடியது. காலங்கள் நேற்று, இன்று, நாளை என மூன்று வகை.

இந்த மூன்று காலத்திலும் மாருமல், அழியாமல் ஒரே நிலையில் உள்ளதுதான் உண்மை. உண்மையான வஸ்து, சத்தியமான வஸ்து ஒன்றே ஒன்றுதான்.

உலகில் உள்ள மற்ற எல்லாப் பொருள்களும் மாறிக்கொண்டும், அழிந்துகொண்டும் இருக்கின்றன. மாருத அழியாத ஒரே ஒரு பொருள் நீயும், நானும்தான். நீ நான் என்று சொல்லக் கூடிய பொருள் ஒன்றுதான். நீயார் என்ருல் நான் ராமன் என்கிறோம். ஆகவே நீயும் நானும் ஒன்றுதான். நீயார் என்ருல் தன்னுடைய உடலைக் காட்டி நான் ராமன் என்கிருன். நீ எங்கு இருக்கிருய் என்ருல் நான் இந்த வீட்டில் வசிக்கிறேன். இவனுடைய உடலைக் காட்டிலும் வீடு வேருக இருக்கிறது.

நான் அங்கு வசிக்கிறேன் என்று சொல்லும் போது தன்னுடைய உடல் இங்கு வசிக்கிறது என்ற கருத்தில் சொல்கிருன்.

இவன் யார்? இவன் யார் என்ருல் என்னுடைய மனைவி என்னுடைய மகன் என்கிருன். இவனுடைய உடலைக் காட்டிலும் இவனுடைய மனைவி. இவனுடைய மகன்வேறு என்றும் அறிந்தும், என்னுடைய மனைவி என்னுடைய மகன் என்கிருன்.

என்னுடைய வங்கியில் திருட்டுப் போய்விட்டது என்கிருன். இவனுடைய உடலைக் காட்டிலும் வங்கி வேருக இருக்கிறது. வங்கியில் பணி புரிகின்ருன் இவன். வங்கி மாதந்தோறும் இவனுக்குச் சம்பளம் கொடுக்கிறது. அந்த அபிமானத்தினுல் என்னுடைய வங்கி என்கிருன்.

வங்கியில் பணி புரியும் போது தவறு செய்து விடுகிருன். அப்போது அவனை உத்தியோகத்திலிருந்து வெளியே அனுப்பி விடுகிருர்கள். அப்போது அவன் கூறுகிருன் தன்னுடைய வங்கி சுத்த மோசமான வங்கி என்று. அப்போது அவனுக்கு அந்த வங்கியின் மீது அபிமானம் இல்லாததினுல் வங்கியைப்பற்றி தவருகச் சொல்கிருன்.

ஆகவே இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்ருல் ஒரு மனிதனுக்கு அபிமானம் வரும்போது தன்னுடையது என்கிருன்.

அபிமானம் இல்லாத போது மோசம் என்கிருன். தன்னுடைய மனைவி தனக்கு அனுகூலமாக இருக்கும்வரை தன்னுடைய மனைவி என்கிருன். எப்போது தனக்கு அனுகூலமாக இல்லையால் திட்டுகிருன். தன்னைக்காட்டிலும் வேருகப் பார்க்கிருன்.

மாம்பழம் இருக்கிறது. அதை மிக ஆசையோடு சாப்பிடுகிருன். அதன் விளைவைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை. ஆனுல் மாம்பழம் சாப்பிடுவதன் மூலம் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அப்போது மாம்பழத்தைக் கண்டாலே வெறுக்கிருன். மற்றவர்களுக்கும் மாம்பழத்தின் தீமையைக் கூறி விலக்குகின்ருன். ஆகவே மாம்பழத்தின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

சமய நந்திகளில்

நந்தாவில்

சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கொக்குவில்-நந்தாவில் கற்புலத்து மனோன்மணி ஆலயத்தில் இலட்சார்ச்சனை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு 1008 சங்குகளால் விசேஷ அபிஷேகம் இடம் பெறும்.

21 ஆம் திகதி லட்சார்ச்சனை பூர்த்தியடையும். (ஒ)

போராளிகளை ஒதுக்கி விட்டு

எந்த ஒரு தீர்வும் காணமுடியாது

ரூபவாஹினிக்கு அமிர் பேட்டி

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ரூபவாஹினிச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியின் முதலாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

கேள்வி: கொழும்பு விஜயத்தில் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?

அமிர்: எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில்தான் எமது கவனம் செலுத்தப்படும். எமது யோசனைகள் இந்திய அரசு மூலம் இலங்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசும் தனது யோசனைகளைச் சமர்ப்பித்து உள்ளது. இருதரப்பு யோசனைகள் குறித்தும் ஒரு உடன்பாடு காணப்படவேண்டும். இதற்கு இரு தரப்பினரும் விட்டுக் கொடுத்து விளங்கிக் கொள்ளும் தன்மை இருக்க வேண்டும்.

கேள்வி: முதல் நாள் பேச்சுக்களின் போது அரசின் மனநிலை எப்படி இருந்தது?

அமிர்: இருதரப்பினரதும் உண்மை நிலையை இப்போது சொல்லிவிட முடியாது. எடுத்துக் கொண்ட பணியைச் செய்து முடிப்பதற்கு உகந்த தருணம் இது. விஷயரீதியான பிரதிபலிப்புக்களைக் காட்டக் கூடாது.

கேள்வி: நீங்கள் தீர்வு அடைவதற்கு வைத்துள்ள ஆகக் குறைந்த கோரிக்கைகள் எவை?

அமிர்: 1985 டிசம்பரில் இந்திய அரசு மூலம் எமது யோசனைகளை இலங்கை அரசுக்குச் சமர்ப்பித்து விட்டோம். அந்த யோசனைகளில் அடிப்படை விஷயங்கள் அடங்கியுள்ளன. இப்போது இலங்கை அரசும் சில யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது. இரண்டு யோசனைகளையும் ஆராய்ந்து ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

கேள்வி: இலங்கை யோசனைகள் பற்றி ஆராயப்பட்டதா?

அமிர்: எமது யோசனைகளையும் அரசின் யோசனைகளையும் நாம் ஆராய வேண்டியுள்ளது. இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை ஏதாவது ஒரு கட்டத்தில் காணவேண்டியுள்ளது.

எமது மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யக் கூடியதாக அது இருக்கவேண்டும். அத்தீர்வை ஏனைய பகுதியினர் ஏற்கக்கூடிய ஒன்ருக அரசாங்கம் கருதவும் வேண்டும். இந்த அடிப்படையில் ஒரு உடன்பாட்டைக் காணுவதே எமது முயற்சி.

கேள்வி: சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்கு பற்ற மறுத்துவிட்டனவே!

அமிர்: அக்கட்சிகள் பங்குபற்ற மறுத்ததன் மூலம் மாநாட்டின் நோக்கம் தோல்வி அடைந்துவிட்டது.

அவர்களையும் வெல்ல முயற்சி செய்ய வேண்டும்.

அதற்கு முன்னர் அரசுக்கும் எமக்கும் இடையே உடன்பாடு ஏற்பட வேண்டும். அதன் பின்னரே அவர்களைச் சேர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கேள்வி: கொழும்பில் எவ்வளவு காலம் தங்கியிருக்க உத்தேசம்?

அமிர்: எமது மக்களுக்கு சேவை செய்வதைத் தவிர எமக்கு வேறு அலுவல் இல்லை. மக்களுக்காக எமது நேரத்தை ஒதுக்கத் தயாராக உள்ளோம். அதன் கருத்து மாதங்கள், வருடங்களாக பேச்சுக்களை இழுத்துக் கொண்டு போவது என்பதல்ல.

நல்லெண்ணம் இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி

குறள்:

எனைப்பகை யுற்ருரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

பொருள்:

எவ்வளவு கொடிய பகை உடையவரும் தப்பி வாழ முடியும்; ஆனல் தீயவை [illegible] நீங்காமல் பின் சென்று வருத்தும்.

வித்தாரம்

என்ன முரளியாரே! இண்டைக்கும் புதிசா கொழும்பிலை இருந்து வாற இங்கிலீஷ் பேப்பர் ஒண்டோட வாறீர்...? ஆர் வாசிக்கிறதுக்கு...? ஓ, ஓ உம்மடை பென்ஷன்காரப் பேரன் வாசிக்கவோ....

சரி, சரி, அவையின்ரை காலத்திலை இங்கிலீஷ் பேப்பர்கள் நேர்மையான, நடுவுநிலைமையான பத்திரிகைகள்தான், இப்ப அப்பிடியில்லை.

இங்கிலீஷ் பேப்பர் எண்டு இருக்கிற மூண்டும் வப்புவாதம் கக்கியும், ஒற்றைக் கண்ணாலை பார்க்கிறதுகளும்தான்.

தமிழ்ச்சனம் இப்படுகிற கஷ்டத்தை அதுகள் உணருகிறயில்லை. அதை விடு..இங்கிலீஷ் பேப்பர்கள் எண்டு இருந்து கொண்டும் சிங்களக்கண்ணோடைதான் பாக்குதுகள்.

அண்டைக்கு ஒருநாள் ஒரு இங்கிலீசுப் பேப்பரிலை முதல் பக்கத்திலை ஒரு படத்தைப் போட்டு அதுக்குப் பெரிய முக்கியத்துவம். போதாக்குறைக்கு அதை வைச்சு ஆசிரியத் தலையங்கம்!

படம் என்ன தெரியுமே....? ஓணாகம வெகர குடியேற்றத்திட்டத்திலை தமிழர்கள் சில பேருக்கும் காணி கிடைச்சதாம். அவையளிலே ஒருவர் கதிரேசன். அவர் தனக்குக் கிடைச்ச காணியைத் துப்பரவு செய்து அங்கு குடியேறத் தனது மகன்மாரோடை புறப்படுகிருர். அதுதான் படம்.

அடர்ந்த தென்னிலங்கைப் பகுதியிலை தமிழர் குடியேறுவதற்கு தேசிய இனவிகிதாசார ரீதியிலான காணிப் பங்கீடு வசதி செய்யுதெண்டு காட்டத்தான் அந்த அமர்க்களம்.

பெரிய குடியேற்றத் திட்டங்களிலை தமிழர் புறக்கணிக்கப்படவில்லை எண்டு வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டுறதும் ஒரு நோக்கம்.

மூண்டாவது நோக்கம்தான் ஆகப் பொல்லாதது. தென்னிலங்கையிலை தேசிய இனவிகிதாசாரப்படி காணிப் பங்கீடு நடந்தால் வடக்குக் கிழக்கிலும் அப்படித்தான் நடக்க வேணும்: அதிலை என்ன பிழை எண்டதைக் கேட்கும் தொனி அது. மாகாண சபைத் திட்டத்திலை இருக்கிற காணி சம்பந்தமான விஷயம் சரி எண்ட கருத்துக்கு ஆதரவு அது.

தென்னிலங்கையிலை பத்துச் சிங்களவரோடை ஒரு தமிழ் ஆள் போய்க் குடியேறினால் அந்தப் பகுதி இனவிகிதாசாரம் மாறுப்படாது. ஆனால் வடக்கிலை அல்லது கிழக்கிலை ஐந்து தமிழர் இருக்கிற இடத்திலை எட்டுச் சிங்களவரைக் கொண்டு வந்து குடியேற்றினால் இனவிகிதாசாரம் மாறும் எண்ட சில்லறைக் கணக்குக்கூட அவைக்கு விளங்கவில்லைப் போலை.

அது விளங்கி இருந்தாலும் தமிழ்ப் பிரதேசத்தை மேலும் மேலும் சிங்களமயப்படுத்த எடுக்கும் சூழ்ச்சியை மூடி மறைக்க இப்படி ஒரு பம்மாத்து! பாத்தியே, அவையின்ரை "ஒற்றைக் கண்" பார்வையை!

இன்னொரு நாள், அதே பத்திரிகை வடக்கு கிழக்குத் தமிழர்களைக் காப்பாற்றுமாறு ஐ.நா. சபையைக் கேட்க வேண்டிய காலம் வந்து விட்டுது எண்டு எங்கடை யாழ்ப்பாண ஆயர் பேசினதுக்குப் பெரிய கண்டனமும், எதிர்ப்பும் தெரிவிச்சு எழுதிச்சுது.

போதாக் குறைக்கு ஆயர் மாநாடு, அவர் இவர் எல்லாரிட்டையும் எதிர்க்கருத்துகள் வாங்கிக் கொட்டை எழுத்துகளிலை போட்டுது. இப்பவும் போட்டுக் கொண்டே வருகுது.

யாழ் ஆயர் ஏதோ பொய்யைச் சொன்னவர் மாதிரி அவையின்ரை சித்தம். அவர் வடக்கிலை மக்களோடு மக்களாக வாழ்கிற படியால் அனுபவத்தாலை

(4-ஆம் பக்கம் பார்க்க)

ரெலிபோன் ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
Mack Communications & Travels
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 24791, 24836

உதயன்

18 – 07 – 1986 வெள்ளிக்கிழமை

வெளிநாட்டுப் பிரயாணம்
★ துரித ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Re-confirmations
★ பாஸ்போட், விசா, பொன்ட்
நம்பிக்கையைப் பெற்றவர்கள்
Mack Communications & Travels
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

ஆனையிறவுக்கு அப்பால்

போக்குவரத்துச் சேவை விரைவில் சீரடையும்

அரச அதிபர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை18

யாழ் குடாநாடுதாண்டிச் செல்லும் வாகனப் போக்குவரத்துச் சேவையில் விரைவில் திருப்திகரமான நிலைமை உண்டாகும். யாழ் அரச அதிபர்வை.மு.பஞ்சலிங்கம் இப்படி நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று அரச செயலகத்தில் வைத்து கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், வர்த்தகசங்கப் பிரதிநிதிகள், லொறிஉரிமையாளர்கள் ஆகியோரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது பொருள்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைபற்றி பிரஸ்தாபிக்கப் பட்டது.

கொழும்பு செல்லும்' வழியில் தடைமுகாம்கள் பல இருப்பதால் அங்கு பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு ஏற்படும் செலவுகள், சிரமங்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

பொருள்களைக் கொழும்புக்கு கப்பல் மூலம் கொண்டுபோக உதவும்படி. சங்கப் பிரமுகர்கள் அரச அதிபரைக் கேட்டுக்கொண்டனர்.

இதுபற்றித் தாம் ஆலோசிப்பதாக அரச அதிபர் உறுதி கூறினார் (வ-5)

நாளை ஐக்கிய ஜெபக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை18

நாட்டின் சமாதானத்துக்காக கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்தும் ஐக்கிய ஜெபக் கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை ஜெபக் கூட்டம் நடைபெறும்.

இதேதினம் உலகின் பல பகுதிகளிலும் இதே போன்ற ஜெபக் கூட்டங்கள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

பஸ் மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) செலுத்தப்பட்டன.

கொல்லப்பட்ட பஸ்ஸின் சாரதி பாலையூரைச் சேர்ந்தவர் என்றும் முல்லைத்தீவு டிப்போவில் சாரதியாக கடமையாற்றுபவர் என்றும் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு நோக்கி வந்த சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்களை சீருடையினர் நெடுங்கேணியில் மறித்து வைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பிரயாணிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்பாக மீட்டுச்சென்று முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளில் சேர்ப்பித்தனர். (அ-10)

வடபகுதி ரயில் ஞாயிறு முதல் வவுனியா வரை

யாழ்ப்பாணம் ஜூலை 18

வடபகுதி ரயில்சேவை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வவுனியாவரை நடைபெறும்.

தினமும் காலையில் கொழும்பில் இருந்து புறப்படும் ரயில் நண்பகல் வவுனியா வந்து சேரும். பின்னர் பிற்பகல் 2-40 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்டு இரவு 8-30 மணிக்கு கொழும்பு சென்றடையும். (அ-இ-5)

குழுநிலை...

(1ம்-பக்கத் தொடர்ச்சி) கள் ஆகிய விஷயங்கள் குறித்து ஒவ்வோர் அரசியல் கட்சியும் முரண்பாடான கருத்துக்களை குழுநிலைக் கூட்டத்தில் வெளியிட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது.

அரசாங்க அமைச்சர்களுக்கு இடையேயும் இது விடயமாகக் கருத்து வேறுபாடுகள் நிலவுவதும் குழுநிலைக் கூட்டங்களில் தெரியவந்தது.

இந்த நிலையில் இன்று 5 குழுக்களும் ஒருமித்த கருத்துக்களைக் கொண்ட அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

பேச்சுக்களில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி) முடியாது.

கேள்வி: ஒருபக்கம் பேச்சுக்கள் நடத்துகிறீர்கள். இன்னொரு பக்கம் கொலைகள் நடக்கின்றன.

அமிர்: இதுபற்றி ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளோம். (உ-எ)

2 வயதுச் சிறுமி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) டார்கள்.

சிப்பாய்கள் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இதனைத் தொடர்ந்து சிப்பாய்கள் முகாமிற்குத் திரும்பினார்கள்.

அங்கிருந்து மீனவர்கள் நெருக்கமாகவாழும் முனை, வெளிச்சவீடு ஆகிய பகுதிகளுக்கு ஷெல்கள் ஏவப்பட்டன. சுமார் ஒருமணி நேரமாக ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் கடற்கரை ஓரமாக இருந்த பல வீடுகள் சேதமுற்றன.

இச்சம்பவத்தின் வயோதிபர் ஒருவரும் பச்சிளம் குழந்தை ஒன்றும் பலியானார்கள்.

பலியானவர் விபரம்:

திரு. என் மத்தியூஸ் வயது 65. வெளிச்ச வீட்டு வீதி, பருத்தித்துறை.

செல்வி அமிர்தநாதன் றெஜிதா வயது 2 முனை, பருத்தித்துறை.

ஷெல் தாக்குதல்களில் படுகாயமுற்றவர்களை அப்பகுதி இளைஞர்கள் அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

அவர்கள் வருமாறு;-

திருமதி மார்க்கு அன்னம்மா வயது 65, முனை பருத்தித்துறை.

திருமதி அமிர்தநாதன் செபமாலைநாயகி வயது 35 முனை பருத்தித்துறை.

செல்வி அமிர்தநாதன் றெசில்டா வயது 1 முனை, பருத்தித்துறை.

மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அத்துடன் பலியான செல்வி அமிர்தநாதன் றெஜிதாவும் இதே குடும்பத்தைச் சேர்ந்தவரே. (இ-118)

35 பேரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) அ. வைரமுத்து, மு. சுவன், கே. குணபாலன். கே. ஞானமுத்து, எஸ். சித்திரவேலு, என். பத்மகுட்டி.

இ. செல்லத்துரை, எம். ஸ்ரீகாந்தன், வி. ஆறுமுகம், கே. நாகேந்திரன், கே. சத்தியசீலன், த. யோகன், த. கனகநாயகம், இ. அருணகிரி, கே. தர்மன், இ. ஜெகன்.

த. ராசகுலம், து. வைரமுத்து, கோ. எதிர்மன்னசிங்கம், த. அழகுதுரை, வ. குணசேகரம், (மல்லிகைத்தீவு உபதபால் நிலைய அதிபர்) போ. வீரக்குட்டி, ஆ. சுப்பிரமணியம், கோ. இராசநாயகம், இ. குமார், க. தங்கராசா.

சி. கனகையா, சி. குணநாயகம், செ. அருளம்பலம், சி. தங்கராசா, நா. சரஸ்வதி, செல்வி. சுந்தவனம். (ட-எ)

வித்தாரம்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி) ஏற்பட்ட கஷ்டத்தைச் சொன்னார். அது தவறே?

உண்மையைச் சொன்னா உடம்பெல்லாம் அவைக்கு நோகுது. தென்னிலங்கையில அப்பாவிச் சனம் சாகிறதைப் பற்றி ஆரும் ஒண்டும் சொல்லயில்லையாம்.

அங்கை இருந்து விட்டு ஒருக்கால் தான் சனம் அப்படிச் சாகுது. இஞ்சை வடக்கில், கிழக்கில தினம் தினம் சனம் செத்துக் கொண்டும், சாவின் விளிம்பிலும் வாழுதுகள். அது எங்கே அவைக்குத் தெரியப் போகுது!



ஆபத்து...

(1ம்- பக்கத் தொடர்ச்சி) மதிக்கப்படவில்லை.

கிளிநொச்சிக்கு திரும்பிச் சென்ற அம்புலன்ஸ் அங்கு பாஸ் பெற்றுவந்த பின்னரே யாழ் நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

இதனால் மூன்று மணி நேர வீண் தாமதம் ஏற்பட்டது.

அம்புலன்ஸில் கொண்டு வரப்பட்ட இருவரினதும் பெயர் விவரம்:-

1. ஆர். சுப்பிரமணியம் (வயது 21) உடப்புவாடி. 2. சோதிபாலன் (வயது 38)

இருவருக்கும் கண்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் ஒன்பது பேர் பஸ் மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். (உ-10)

கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) படையைக் கட்டுப்படுத்துவது உங்கள் பொறுப்பு -- இப்படி திரு. அமிர்தலிங்கம் நேற்றைய சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் கூறினார்.

கூட்டணியினர் தெரிவித்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்து உடன் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

அரசியல் கட்சிகள் மாநாடு இன்றுடன் முடிவடைவதாக இருப்பினும், கூட்டணித் தலைவர்கள் திங்கட்கிழமைவரை கொழும்பில் தங்கியிருப்பார் எனவும் அறியவந்தது. (அ-உ)

ஏழு சிப்பாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) தினர்.

மக்கள் விடுதலைப்படை வீரர்களால் எஸ் எல். — 84 மோட்டார் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது ஏழு இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

சிலர் படுகாயமடைந்தனர். இதனை அடுத்து ஶ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமை நோக்கிப் பின் வாங்கினர்.

இச்சமயில் மக்கள் விடுதலைப்படை தரப்பில் எதுவித சேதமுமில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

போராளிகளை ஒதுக்கி விட்டு---

(3-ம் பக்கத் தொடர்ச்சி) தரப்பிலும் இருக்கவேண்டும்.

கேள்வி: பிரிவினைவாத பயங்கரவாதிகளுடனான தங்களின் தொடர்புகள் பற்றி கூறுவீர்களா?

அமிர்: அவர்களை பிரிவினைவாத பயங்கரவாதிகள் என்று அழைக்கக் கூடாது.

ஓர் இலட்சியத்துக்காக தம்மையே அர்ப்பணித்த இளைஞர்கள் அவர்கள்.

அவர்களுடன் நாம் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றோம். இங்கு வரும் முன்னர் அவர்களின் ஐந்து தலைவர்களுடனும் நாம் பேசினோம். ஒரு தீர்வு காணப்பட்டால் அதை அமுல் நடத்துவதற்கு போராளிகளையும் நாம் அணைத்துக் கொண்டு செல்ல வேண்டும்.

இல்லையேல் உடன்பாடு எதையும் அமுல் நடத்துவது மிகவும் கஷ்டமான காரியமாகிவிடும். இப்பிரச்சினையில் போராளிகள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றார்கள்.

அவர்களை ஒரு பக்கம் ஒதுக்கி விட்டுப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட எவரும் நினைக்க முடியாது.

இது இலங்கை அரசுக்கு நன்றாகத் தெரியும். அதனால் திம்புவுக்குப் போய் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தினர்.

நாமும் அவர்களுடன் பேசும் நிலையில் உள்ளோம் எப்படிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்? என்ற நிலைப்பாட்டை அவர்களுக்குத் தெரியப்படுத்தி உள்ளோம்

கேள்வி: நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி தீவிரவாதிகள் உங்களுக்குச் சொல்வதாக இங்கு ஓர் அபிப்பிராயம் நிலவுகின்றது. அவர்கள் மீது உங்களுக்குக் கட்டுப்பாடு இல்லை?

அமிர்: இது சரியென்று நான் எண்ணவில்லை. எமக்கு என்று ஒரு சிந்தனை உண்டு எது சரி என்று எண்ணுகின்றோமோ அதன்படி நாம் நடக்கின்றோம். போராளிகளும் தமிழர்களில் ஒரு பகுதியினர்.

முக்கியம் என்ன என்றால் நாம் யாருக்கு சேவை புரிய விரும்புகின்றோமோ நாம் யாரின் பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகின்றோமோ அதில் அவர்களும் எம்முடன் இணைந்து செயல்பட வேண்டியவர்களே.

கேள்வி: ஜனநாயக பாரம்பரியத்தில் ஊறியவர் நீங்கள். வன்செயல்களை நிறுத்துவதற்கு தீவிரவாதிகள் மீது கூட்டணிச் செயலாளர் நாயகம் என்ற முறையில் செல்வாக்கைப் பிரயோகிக்க முடியாதா?

அமிர்: இரு தரப்பிலும் வன்செயல்கள் உண்டு. தான் போராளிகளின் வன்செயல்கள், ஆயுதபடையினர் நடத்தும் வன்செயல்களுக்கான எதிர் நடவடிக்கையே. இப்போது அவர்கள் முகாம்களில் இருந்து படையினர் வெளியே வந்து மக்களைத் தாக்குவதைத் தடுத்து வருகின்றனர். அதனால்தான் போராளிகள் மக்களைக் காப்பாற்றுபவர்களாக மதிக்கப்படுகின்றனர்.

(தொடரும்)

நீயும் நானும்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி) மீது ஆசை வைத்திருக்கும்போது மாம்பழத்தை சாப்பிட வேண்டும்என்ற பற்றும், அதைப்பற்றிய உயர்ந்த எண்ணமும் ஏற்படுகிறது. எப்போது தனக்கு அந்தப் பழம் அனுகூலம் இல்லாமல் ஆகிறதோ அப்போது அந்த பழத்தை வெறுக்கிறான்.

இதனால் என்ன தெரிகிறது என்றால் ஒருபொருளின்மீது ஆசையும், துவேஷமும் வரும்போதுதான் விருப்பு, வெறுப்பு ஏற்படுகிறது என்று தெரிகிறது. ஆகவே உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் பார்க்கும்போது மனிதனுடைய வாழ்க்கையிலே தனக்கு வேண்டும் என்ற ஆசை தோன்றும்போது விருப்பமும், வேண்டாம் என்று தோன்றும் போது வெறுப்பும் ஏற்படுகிறது.

அபிமானமும், அபிமானம் இல்லாததும் சேர்ந்ததுதான் ஒரு மனித வாழ்க்கை என்று தெரிகிறது. இந்த அபிமானமானது எங்கு இருக்கிறது. நம்முடைய மனதிலே நம்முடைய புத்தியிலே இருக்கிறது.

புத்தியிலே, மனதிலே உள்ள அபிமானமானது, பற்றுனது, ஆசையானது கண், காது போன்ற இந்திரியங்களின் மூலமாக உறுப்புக்களின் மூலமாக வெளியே உள்ளபொருள்களில் சென்று விருப்பு, வெறுப்பையும்ஏற்படுத்தி அதன் மூலம் நம்முடைய வாழ்க்கையை நடத்தி வருகிறது.

இந்த அபிமானம்தான் நான் என்ற சொல்லாலும், நீ என்ற சொல்லாலும் என்னுடைய என்ற சொல்லாலும், உங்களுடையது என்ற சொல்லாலும் தம்முடையது என்ற சொல்லாலும் நம்முடையது என்ற சொல்லாலும் சொல்லப்படுகிறது.

ஆகவே நீயும் நானும் ஒன்றுதான்.

பிரசுர உதவி:
இந்துமதம் அழைக்கிறது

வாங்கவும்
விற்கவும்

விற்பனைக்கு

நாவடி - மானிப்பாய் வீதியில் பத்திரகாளி கோயில் அருகாமையில் 19 பரப்புக் காணி மின்சார வசதியுடன், வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. விவசாயப் பண்ணை, விலங்குப் பண்ணை, ஆலை அமைப்பதற்கு உகந்தது. அ. ஶ்ரீசரன், 'தோப்பு', சுதுமலை, ஆனைக்கோட்டை.

தேவை

சுன்னாகம் பகுதியில் உள்ள நுகர்ச்சிப் பொருள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ளவரும், பிணைப் பணமும் செலுத்தக் கூடிய முகாமையாளர் தேவை. சகல விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 28, மே பா.உதயன், யாழ்ப்பாணம்.

தேவை

எமது விவாகம் நிறைவேற்றும் யாழ்ப்பாணக் கிளைக்கு லிகிதர் தேவை. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும் ஶ்ரீ மாணவ விநாயகர் மங்கள ஏஜன்சி கொல்லங் கலட்டி, தெல்லிப்பழை

விளையாட்டரங்கு

15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்

இரு இந்து அணிகள் மோதும் இறுதியாட்டம்

இன்றும் நாளையும் சென்பற்றிக்ஸ் மைதானத்தில்

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 15 வயதுக்குட்பட்டோர் அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இரண்டு இந்துக் கல்லூரி அணிகள் மோதுகின்றன.

இன்றும் நாளையும் நடைபெறும் இந்த இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், யாழ் இந்துக் கல்லூரி அணியும் நேரடியாக மோதுகின்றன.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டி இன்று பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகும்.

இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் இரண்டு அணிகளும் எந்த ஓர் அணியுடனும் இதுவரை தோல்வியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்களில் கொக்குவில் இந்து அணி சென். ஜோன்ஸ் அணியை முதல் இன்னிங்ஸ் வித்தியாசத்திலும்—

யாழ் இந்து அணி, யாழ் மத்திய கல்லூரி அணியை இன்னிங்ஸாலும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகின. (உ-7)

முதலாம் பிரிவு

யாழ் இந்து வெற்றி

யாழ்ப்பாணம். ஜூலை18

முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியொன்றில் யாழ் இந்துக் கல்லூரி அணி ஒஸ்மானியாக் கல்லூரி அணியை 5—2 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

ஆட்டம் முடிவடைந்த போது இரு அணிகளும் தலா இரண்டு கோல்கள் போட்டமையினால் பெனல்ட்டி உதைகள் மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது.

யாழ் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் கே. இராமேஸ்வரன் இரண்டு கோல்களையும் கே. இளங்கோ, எஸ். சுரேஷ் பி. பிரபானந்தன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.

ஒஸ்மானியா கல்லூரி அணிக்கான இரண்டு கோல்களையும் ஏ. இனயாஸ் போட்டார்.

யாழ் இந்து மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. (இ-7)

காங்கேசன் - லங்கா

மோதலில் வெற்றி-தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 18

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை அணிக்கும், லங்கா சிமெந்து லிமிட்டெட் அணிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இந்த ஆட்டத்தில் காங்கேசன் சிமெந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். சிவராஜா, எஸ். ஆனந்தராஜா, ஆர். கிருபைநாதன், எம். ஜீவராஜா, என். பெக்மன் ஆகியோர் முறையே 41, 40, 32, 24, 23 ஓட்டங்களையும் எம். ஏ. செல்வராஜா ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ் சந்திரன், எஸ். தர்மராஜா, என் சிறிதரன் ஆகியோர் முறையே 19, 25, 34 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களையும், நீ சிறிராகுலன் 32 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய லங்கா சிமெந்து அணி ஆரம்பத்தில் விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அந்த வேளையில் கே. அருந்தவராஜா கைப்பற்றிய ஒரு விக்கெட் ஆட்டத்தைத் திசை திருப்பியது.

இறுதியில் இந்த அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டதாக அறிவித்தது.

அபாரமாக ஆடிய ரவீந்திரன், சிறீதரன் ஆகியோர் முறையே 56, 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே.அருந்தவராஜா 11 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும், எம். ஏ செல்வராஜா 47 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் காங்கேசன் சிமெந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்ற போது நேரம் போதாமையினால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

எம். ஏ செல்வராஜா ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றார்.

என். தர்மராஜா, ஏ. பஷீர் ஆகியோர் தலா 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக லங்கா சிமெந்து அணி வீரர் எஸ். ரவீந்திரனும் —

சிறந்த பந்துதடுப்பாளராக லங்கா சிமெந்து அணித் தலைவர் என் தர்மராஜாவும் தெரிவாகினர்.

சிறந்த பந்து வீச்சாளராகவும் இந்தப் போட்டியின் சிறப்பு வீரராகவும் காங்கேசன் சிமெந்து அணியைச் சேர்ந்த எம். ஏ. செல்வராஜா தெரிவானார்.

இவருக்கு "த ஷப்ரு யுனிகோ பிறின்ஸ் லிமிட்டட்'' ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட "ஷப்ரு'' வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. (இ-7)

நவ்பீல்ட் பாடசாலை இல்ல போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை18

கைதடி நவ்பீல்ட் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை நண்பகல் 1 . 30 மணி தொடக்கம் பிரஸ்தாப பாடசாலை மைதானத்தில் நடைபெறுகின்றன.

பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்கிறார். (இ)

ஊர்காவல் படையை ஒழித்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) முரண்பாடுகளை விரிசல் அடையச் செய்வதில் சிங்கள அரசு ஈடுபட்டுள்ளது.

இச்சதிவலைக்குள் தமிழ் பேசும் சமூகத்தில் இருந்து விடுபட்ட சில அநாகரிகக் கூட்டங்கள் விழுந்து விடுகின்றன.

இவைகளே ஊர்காவல் படைகள் என்று சிங்கள அரசால் அழைக்கப்படுகின்றன.

இந்நிலையில் உயரிய முஸ்லிம் சமூகத்தில் இருந்து விடுபட்ட சிலர் ஊர்காவற்படை என்று இனத்திற்கே கோடரிக் காம்பாக அமைவது அனுமதிக்கப்பட முடியாததாகும்.

ஊர்காவல் படையால் தமிழீழ மக்கள் கொல்லப்படுகின்றனர்; மானபங்கப்படுத்தப் படுகின்றனர். சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன.

எம் எதிரிக்கு ஒப்பாக அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் இப் பயங்கரவாதச் செயல்களைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாத சூழ்நிலையே நிலவுகிறது.

ஒருகோடி இன எதிரிகளால் தினம் தினம் அழிக்கப்பட்டுவரும் ஒரு சிறிய சனத்தொகை கொண்ட தமிழினத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை எம்முடையது.

எனவே முஸ்லிம் முற்போக்குச் சக்திகள் எம்முடன் இணைந்து இக் கோடரிக் காம்புகளைக் களைந்தெறிய உதவ முன்வரவேண்டும்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது (இ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 18—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N86.